# பத்திரிக்கை செய்தி

## தனிபட்டா மாறுதல் செய்து தர ரூ.5,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.சுபாஸ், உடையான்தாங்கல் கிராமம், செஞ்சி தாலுகா, விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனி பட்டா கேட்டு கண்டமனநல்லூர், உடையான்தாங்கல், இரும்புலி கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.திருநாவுக்கரசு, கிராம நிர்வாக அலுவலர், கண்டமனநல்லூர், உடையான்தாங்கல், இரும்புலி கிராமம், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 02.04.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.திருநாவுக்கரசு, கிராம நிர்வாக அலுவலர், லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.